Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 449 /2023

Deposition of witness for Prosecution P.W. 1 Date : 04.10.2024

| | | | |
|---|---|---|---|
| Name : | ராஜாமணி | Village : | மயிலம்பட்டி |
| Father's Name : | தங்கச்சாமி | Taluk : | சூலூர் |
| Age : | 43 | Religion : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of May 2024 **(Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது மயிலம்பட்டி கருப்பராயன்பாளையத்தில் குடியிருந்து மோட்டர் கம்பெனியில் கான்ட்ராக்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சாலை விபத்தில் இறந்து போன மூன்று நபர்களும் வட இந்தியாவை சேர்ந்தவர்கள். அதில் ஒரு நபர் எங்களது கம்பெனிக்கு ஆட்களை வேலைக்காக அனுப்பி வைக்கும் கான்ட்ராக்டராக இருந்தார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் மாலை 6 மணியளவில் கம்பெனியில் இருந்த போது எனக்கு விபத்து நடந்த இடத்தில் இருந்து எனக்கு போன் வந்தது. நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது அங்கு இருந்தவர்களை ஆம்புலன்சில் எடுத்து சென்றுவிட்டதாக சொன்னார்கள். அதன் பின்பு நான் காவல் நிலையம் சென்றேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சம்பவத்தின் போது அவர்கள் எடுத்துச் சென்றது என்னுடைய இருசக்கர வாகனம் தான். அவர்கள் போகும் போது இரண்டு நபர்களாக சென்றார்கள். எப்போது அவர்கள் மூன்று நபர்களாக சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் சென்ற வாகனத்தில் மீது லாரி மோதியதாக சொன்னார்கள். அந்த வாகனத்தினை ஓட்டிச் சென்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது. என்னை இந்த வழக்கு தொடர்பாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஐந்தாவது வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரில் உள்ள விவரங்களை அங்கு போலீஸ் ஒருவர் தான் எழுதினார். அதில் என்ன விவரம் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.